பாடம் **12** ஜூன் 13-19



# அவரை அறிவியுங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மத் 28:18–20; 2பேது 3:18; 1பேது 3:8–15; ஓசியா 7; சக 10.

**மனன வசனம்:** இளைப்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப் போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார். ஏசா 50:4.

போதகர் ஜி அதிகாலையிலேயே எழுந்திருந்தார் ஓய்வுநாள் பள்ளிப் பாடம் நடத்தவும், பிரசங்கம்பண்ணவும் ஆயத்தம் செய்தார்; அதுமட்டுமல்லாமல், அன்று மதியவேளையில் ஒரு சுவிசேஷத் தொடரையும் வழிநடத்தவேண்டியிருந்தது. கார் சாவியை எடுத்துக்கொண்டு, வீட்டிற்கு வெளியே ஓடிவந்து, வேகமாகக் கிளம்பிச்சென்றார்.

நகரத்தின் போக்குவரத்து நெரிசலில் கார் சென்றது; சனிக்கிழமைக் காலையில் ஏராளமான பேர் வெளியே வந்திருப்பது அவருக்கு எரிச்சலாக இருந்தது. ஏனெனில் அவர்களால் இவர் ஆலயத்திற்குச் செல்லத் தாமதமாகுமே! 'இவர்கள் எல்லாரும் எங்கே போகிறார்கள்?' என்று தனக்குள் கேட்டுக்கொண்டார். அப்போது, எங்கிருந்தோ வந்த ஒரு கார் அவருக்கு முன்னால் குறுக்கே வந்தது. அவர் உடனடியாக தடைமிதியை (பிரேக்கை)ப் பலமாக அழுத்தினார்; ஆத்திரத்தில், கோபத்தில் தனது கைமுஷ்டியை உயர்த்தி, அந்த ஓட்டுநரைத் திட்டினார்.

எல்லாத் தடைகளையும் தாண்டி, இறுதியாகப் போதகர் ஜி ஆலயத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் பாடம் நடத்துவதற்காக முன்பாகப் போய் நின்றபோது, வகுப்பில் இருந்தவர்களைக் கவனித்தார். அப்போது ஒரு பரிச்சயமான முகத்தைப் பார்த்ததும் அவர் கண்கள் அப்படியே நிலைத்து நின்றன: சரியாக 20 நிமிடங்களுக்கு முன்பு, அவர் யாரிடம் கோபப்பட்டாரோ அதே கார் ஓட்டுனர்தான் அவர்! சுமார் 20 நிமிடங்களுக்குப் பிறகு, ஒரு சபை உறுப்பினர் அந்த ஓட்டுநரை போதகர் ஜி-யிடம் அறிமுகம்செய்து வைத்தார்.

அவர் உறவினர்களைப் பார்க்கவந்த ஒரு அட்வெண்டிஸ்ட் அல்லாத நபர் ஆவார். அப்போது போதகர் ஜி ஓர் உண்மையை மீண்டும் உணர்ந்தார்: தெரிந்தவர்களாக இருந்தாலும் சரி, தெரியாதவர்களாக இருந்தாலும் சரி, நாம் மற்றவர்களிடம் காட்டும் ஒவ்வொரு அணுகுமுறையும் தேவனோடுள்ள ஆழமான உறவிலிருந்து வெளிப்படும் அன்பினால் நிறைந்திருக்கவேண்டும். ஒரு விசுவாசியாக, உங்களுடைய செயல்கள் மற்றவர்களிடம் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உங்களால் ஒருபோதும் கணிக்கமுடியாது.

***2026*, ஜூன் *20* வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்**

# நிறைவிலிருந்து

**மத் 28:18–20இல் உள்ள மாபெரும் கட்டளையை வாசிக்கும்போது, இயேசு 'சகல' அல்லது 'சகல நாட்கள்' என்கிற வார்த்தையை நான்கு முறை பயன்படுத்துகிறார். கிரேக்கத்தில் இரண்டுக்கும் பாஸ் என்கிற ஒரே வார்த்தைதான் வருகிறது. அதில் இயேசு சுட்டிக்காட்டும் வெவ்வேறு செய்திகளை எழுதுங்கள்.**

உலகத்தில் தம்முடைய செய்தியை அறிவிக்கும்படி இயேசு ஒரு கட்டளையைக் கொடுத்தார்: 'நீங்கள் புறப்பட்டுப்போய், ... சீஷராக்(குங்கள்)'. செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் ஊழியம் சீடர்களை உருவாக்குவதாகும்; அவர்கள் மற்ற சீடர்களை உருவாக்குவார்கள். இவ்வாறு இயேசுவின் சீக்கிர வருகைக்காக உலகத்தை ஆயத்தம்பண்ணும்படி நாம் எல்லாரும் நித்திய சுவிசேஷத்தையும் முத்தூதையும் அறிவிக்கமுடியும். வெளி 14:6-12.

கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வைப் பெற்ற எவரும் சாட்சிபகரும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் பல நேரங்களில், சாட்சிபகருவதைத் தங்களால் முடியாத ஒன்றாக அல்லது விருப்பமில்லாத ஒன்றாக மக்கள் நினைக்கிறார்கள். தெருமுனையில் நின்று பிரசங்கம் செய்வதை அல்லது ஆழமான ஒரு வேத ஆராய்ச்சியை நடத்துவதை யோசித்ததும், முடியாதென்பதுபோலத் தலையை அசைத்து, 'இதையெல்லாம் நான் செய்ய வாய்ப்பே இல்லை! நான் தனிமையை விரும்புகிறவன்; சாட்சி பகருவது எனக்கு ஒத்துவராது' என்று நினைக்கலாம்.

ஆனாலும், உண்மையான சாட்சி பகருதல் என்பது தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்திருப்பதை நீங்களே நேரடியாகப் பகிர்வதாகும். நீங்கள் அவரில் வளரும்போது அவர் உங்களுக்குக் கற்பிப்பவற்றைக் கவனித்து, பிறகு உங்கள் அனுபவத்தை மற்றவர்களுடன் எளிமையாகப் பகிர்ந்துகொள்வதுதான் சாட்சி பகருதல். தேவன் மிகவும் நல்லவர்; அவர் நமக்காகச் செய்திருப்பவைதான் இந்த உலகம் கேட்கக்கூடிய மிகச்சிறந்த செய்தி. நாம் மௌனமாக இருக்கமுடியாது, இருக்கவும் கூடாது! அவர் உங்களை மீட்டெடுத்திருக்கிறார்; அவர் உங்களைப் பெயர்சொல்லி அழைத்திருக்கிறார்; நீங்கள் அவருடையவர்கள். எங்கேயும் எவருக்கும் இதைவிடச் சிறந்த செய்தி இருக்கமுடியுமா?

ஆதிகாலத் திருச்சபையின் சீடர்கள் ரபீக்களின் பள்ளிகளில் பயின்றவர்களாகவோ வாய்மொழி மரபுகளில் சரளமாகப் பேசுபவர்களோ இல்லையென்றாலும், அவர்களிடமிருந்து நாம் இன்னும் பல பாடங்களைக் கற்கமுடியும்.

**ஆரம்பகாலத் திருச்சபையில் சாட்சிபகருதல் எவ்வாறு இருந்தது? பேதுருவும் யோவானும் சாட்சிகொடுத்ததைக் கேட்டவர்கள்மீது அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது? அப் 1:8; 4:13.**

'நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே'. அப் 4:20. 'அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள்', அதனால் சாட்சி பகரவேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். அப் 4:13. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குத் தைரியத்தையும், அவர்களது வார்த்தைகள் மற்றவர்களை உணர்த்துகிற வகையிலான வல்லமையையும் அளித்தார்.

இப்போது சிறிது நேரம் ஜெபியுங்கள். உங்கள் வாழ்க்கையில் தேவன் கொண்டுவரும் நபர்களிடம் அவரைப்பற்றிப் பகிர்ந்துகொள்ளத் தேவையான தைரியத்தைத் தருமாறு அவரிடம் கேளுங்கள். எப்பொழுது பேசவேண்டும், என்ன சொல்லவேண்டும் என்பதை அறிந்துகொள்ளத் தேவையான ஞானத்திற்காகவும் அவரிடம் வேண்டுங்கள்.

# கட்டாயத்தினால் அல்ல, வல்லமையால்

நாள்தோறும் அநேக மக்களுக்கு ஊழியஞ் செய்யவும், குணமாக்கவும், தேற்றவும், போதிக்கவும் தேவையான உத்வேகம் இயேசுவுக்கு எவ்வாறு குறையாமல் இருந்ததுா? மத் 9:36. மனுக்குலத்தின்மீதான இயேசுவின் அன்பும் உருக்கமுமே அவருடைய ஊழியத்திற்கு உந்துதலாக இருந்தது. அதேபோல, நமக்குள் இருக்கும் தேவஅன்பு, ஆத்துமாக்களை அவரிடமும் அவருடைய சத்தியத்திடமும் வழிநடத்துகிற பாரத்தை நமக்குள் உருவாக்க வேண்டும். 2கொரி 5:14. ஒரு கூட்டத்தில் முன்பின் தெரியாத நபர்களின் முகங்களைப் பார்க்கும்போது, அவர்களின் நித்திய வாழ்வைப் பற்றியும், அவர்கள் இயேசுவை அறிந்திருக்கிறார்களா என்பதையும் குறித்து நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

உதவி தேவைப்படுகிற ஓர் அந்நியருக்கு உதவும்போது, அது தேவனுடைய அன்பைத் தவிர வேறு எதுவாகவுமே இருக்கமுடியாதே? நமக்குள் இருக்கும் தேவ அன்பு, ஆத்துமாக்களை அவரிடம் வழிநடத்தவேண்டும் என்கிற பாரத்தை ஏற்படுத்துகிறது. எரேமியா தீர்க்கதரிசி எரே 20:9இல் விவரிக்கிறார்.

ஆனாலும், நாம் தேவனைப்பற்றி மற்றவர்களிடம் பகிரும்போது, தேவனையோ அவருடைய வேதகாமச் சத்தியத்தையோ ஏற்றுக்கொள்ளும்படி ஒருபோதும் கட்டாயப்படுத்தக்கூடாது. கட்டாயப்படுத்துதல் தேவனுடைய சுபாவத்திற்கு முற்றிலும் எதிரானது. ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்காமல் இருக்கும்படி தேவன் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. ஆதி 2:16,17. பெருவெள்ளத்திலிருந்து தப்பிக்க பேழைக்குள் செல்லும்படி மக்களை வற்புறுத்தவில்லை. ஆதி 7:1. இஸ்ரவேலர்கள் உடன்படிக்கையில் நிலைத்திருக்கவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தவில்லை. உபா 4:29-31. மாறாக, அவர்களுடைய தேவைகளைச் சந்தித்தார். மத் 4:23-25. பிறகு தம்மைப் பின்பற்றும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதுமில்லை. மத் 23:37. நாம் சாட்சிபகரும்போது, நம்முடைய அணுகுமுறை எப்பொழுதும் இயேசுவின் அணுகுமுறையைப் பிரதிபலிக்கவேண்டும். எலன் ஜி. ஒயிட் அவர்கள் கூறுகிறார்:

‘மனிதர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்களை வற்புறுத்துவது கிறிஸ்துவின் ஊழியத்தின் ஒரு பகுதியல்ல. சாத்தானும், அவனுடைய ஆவியால் தூண்டப்பட்ட மனிதர்களுமே மனசாட்சியைக் கட்டாயப்படுத்த முயல்பவர்கள். நம்முடைய பணிகளை மதிக்காதவர்களையோ நம்முடைய கருத்துக்களுக்கு எதிராகச் செயல்படுபவர்களையோ காயப்படுத்தவேண்டும் அல்லது அழிக்கவேண்டும் என்கிற எண்ணம் நமக்கு இருக்குமானால், நம்மிடம் சாத்தானின் ஆவி இருக்கிறது என்பதற்கு அதைவிட உறுதியான ஆதாரம் வேறெதுவும் இருக்க முடியாது.’

தேவ பணியைச் செய்ய நம்மை ஒரு கருவியாக மாற்ற நாம் அனுமதிக்க வேண்டும். சத்தியத்தை வெறுக்கிற ஓர் உலகில் வாழ்கிறோம்; ஆனால், அந்த எதார்த்த நிலை, சத்தியத்தை நாம் சிந்தனையோடும், அன்போடும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதைத் தடுத்துவிடக்கூடாது. சாட்சி பகருதலின் ஆரம்பக்கட்டங்களில், நம் சொந்த வாழ்க்கையின் சாட்சியே மற்றவர்களிடம் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வெளி 12:11.

நீங்கள் எவ்வாறெல்லாம் கிருபையிலும் அறிவிலும் வளருகிறீர்கள்? 2பேதுரு 3:18. உங்களைச் சுற்றியிருப்பவர்களுடன் நீங்கள் பழகுகிற விதங்களில் இது எவ்வாறு வெளிப்படுகிறது?

# இயேசுவை அறிவிப்பதற்கான குறிப்புகள்

நம் ஒவ்வொருவருக்குமான கேள்வி இதுதான்: நீங்கள் யாருடன் இயேசுவைப் பகிர்ந்து கொள்கிறீர்கள் - தபால்காரரிடமா, கடை ஊழியரிடமா அல்லது நீங்கள் நடைப்பயிற்சி செய்யும்போது தினமும் பார்க்கும் ஒருவரிடமா? இந்தப் பணியில் தமக்கு உதவும்படி தேவன் ஒவ்வொரு விசுவாசியையும் அழைக்கிறார். மேலும், 'இளைப்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளுவதாக' வாக்குறுதி அளிக்கிறார். ஏசா 50:4. அதோடு, நமக்குள் இருக்கும் விசுவாசம் மற்றும் நம்பிக்கையைக்குறித்து நம்மிடம் விளக்கம் கேட்கிற எவருக்கும் பதில் சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருப்பது ஒரு கிறிஸ்தவனின் கடமையாகும். 1பேதுரு 3:15.

**1பேதுரு 3:8-15இல் தேவ வார்த்தை நமக்குச் சொல்வது என்ன?**

மற்றவர்களிடம் இயேசுவைப் பகிர்ந்துகொள்வதில் அதிக ஆர்வத்துடனும் நோக்கத்துடனும் செயல்பட சில எளிய குறிப்புகள்:

- ஒருவரை நன்கு அறிந்துகொண்டு, காலப்போக்கில் அவரோடு ஓர் ஆழமான நட்பை உருவாக்குங்கள். உங்கள் கனிவான பண்பு, தயவு மற்றும் அவர்கள்மீது நீங்கள் காட்டும் உண்மையான அக்கறை (அதாவது அன்பு) அவர்களைத் தேவனிடம் இழுப்பதற்கு உதவும். (சிலர் இதை 'நட்பு வழி சுவிசேஷம்' என்கிறார்கள்.)
- பரிசுத்த ஆவியானவர் அந்த நபரின் இருதயத்தில் கிரியைசெய்யும்படி ஜெபியுங்கள். அவர்களோடு பழகுவதற்குச் சரியான வாய்ப்புகளைத் தருமாறு தேவனிடம் வேண்டுங்கள்.
- உங்களுடைய சொந்த விசுவாச அனுபவங்களைப்பற்றிப் பேசுவதற்கோ அல்லது அவர்களுக்காக ஜெபிப்பதற்கோ இயல்பான வழிகளைக் கண்டறியுங்கள். உங்களது அணுகுமுறையில் தைரியத்தையும், அதே சமயம் கனிவையும் தருமாறு தேவனிடம் கேளுங்கள்.
- உங்கள் புதிய நண்பரை உங்கள் சபையிலுள்ள மற்றவர்களுடன் இணைப்பதற்கான வழிகளைக் கண்டறியுங்கள்; அப்போதுதான் அவர்கள் உங்கள் சபை சமூகத்தின் அரவணைப்பை நேரில் அனுபவிக்கமுடியும். ஒரு சபைக் குழுவை உருவாக்குதல் அல்லது சிறு வேத ஆராய்ச்சிக் குழுவை உருவாக்குதல் இதற்கு அடுத்த சிறந்த கட்டமாக இருக்கமுடியும்.
- உங்கள் புதிய நண்பரின் குறிப்பிட்ட தேவைகள் அல்லது கேள்விகளுக்காக ஜெபியுங்கள். வேதாகமம் எவ்வாறு நம் வாழ்வில் ஆறுதல், அறிவுரை மற்றும் வழிகாட்டுதலை வழங்குகிறது என்பதைக் காண்பிக்க வாய்ப்பைத் தேடுங்கள். துவக்கத்தில் ஒரு சிறிய வேதாகம வாக்குறுதியைப் பகிரலாம் அல்லது அவர் கேட்கிற ஒரு கேள்விக்குப் பதிலளிக்கலாம்; இது ஆழமான உரையாடல்களுக்கான கதவைத் திறக்கும். அத்தகைய தருணங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- உங்கள் நண்பர் அடுத்த கட்டத்திற்குச் செல்ல விரும்புகிறாரா (வேத ஆராய்ச்சி மற்றும் ஞானஸ்நானம்) என்று நீங்கள் கேட்க வேண்டிய ஒரு கட்டம் வரும். அந்தக் கட்டம் வரும்வரை அவசரப்பட வேண்டாம், அதே சமயம் தாமதிக்கவும் வேண்டாம். இதற்காகவும் ஜெபியுங்கள்.
- நம்முடைய செயல்கள் நாம் யாருடையவர்கள் என்பதை வெளிப்படுத்தவேண்டும். நம் வாழ்வில் மற்றவர்களை நாம் எப்படி நடத்துகிறோம் என்பது நம்மைப்பற்றி அதிகம் பேசும். நம்முடைய குணாதிசயங்கள் அவருடைய சாயலாக மாற்றப்படும்போது (பரிசுத்தமாக்கப்படுதல்), எல்லா மக்களையும் அவரிடம் இழுக்கிற வகையில் நாம் வாழ்வோம்.

# வழிதவறிய பிள்ளை

தங்கள் பிள்ளைகள் உறுதியான, ஆவிக்குரிய குடும்பச் சூழலில் வளர்க்கப் பட்டாலும், கர்த்தருடனான உறவை விட்டு விலகிச்செல்லத் தீர்மானித்தபோது ஏற்படும்வலியையும்மனவேதனையையும்பலர்நேரடியாகஅறிந்திருக்கிறார்கள்.

**தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேசத்தின் ஒரு பகுதியாக இருந்த எப்பிராயீம், கர்த்தரை விட்டு விலகிச்சென்றது. ஓசியா 4:17 மற்றும் ஓசியா 7 ஆகிய அதிகாரங் கள் எப்பிராயீமின் பாவங்களைப்பற்றி என்ன சொல்கின்றன?**

---

மேலும், எப்பிராயீமின் பாட்டியான ராகேல், எப்பிராயீம் கர்த்தருடனான உறவைவிட்டு விலகிச்சென்றதற்காக உருவகமாக அழுதுகொண்டிருப்பதாக வாசிக்கிறோம் எரே 31:15. அவளுடைய அந்தப் பெரும் துயரத்திற்கு, கர்த்தர் இவ்வாறு பதிலளிக்கிறார்: 'நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துரு வின்தேசத்திலிருந்துதிரும்பிவருவார்கள். உன்முடிவைப்பற்றிஉனக்குநம்பிக்கை யுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த் தர் சொல்லுகிறார்.' எரே 31:16,17.

**வழிதவறிப்போன தன் பிள்ளைக்காக அழுவதற்குப் பதிலாக, ராகேலை நம்பிக்கை யோடு இருக்க கர்த்தர் கூறுகிறார். வேறென்ன சொல்கிறார்? எரே 31:18–19.**

எப்பிராயீமின் கதையின் வாயிலாக, எப்போதும் நம்பிக்கை உண்டு என் பதைக்கற்றுக்கொள்கிறோம்; ஏனென்றால், தேவன் ஒருபோதும் யாரையும் கைவிடு வதில்லை. வழிதவறிப்போன தம் மக்களை அவர் மீண்டும் மீண்டும் கடிந்து கொண்டாலும், தேவனுடைய உருக்கம் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. இந்த அதிகாரத்தில் அவர் தொடர்ந்து பேசுகிறார். எரே 31:20.

தேவனோடு உள்ள உறவை விட்டு விலகிச்சென்றிருக்கிற நம்முடைய நெருங்கிய உறவினர்களைக்குறித்து நாம் மிகுந்த வேதனையாகவும், ஏமாற்ற மாகவும், மனச்சோர்வாகவும் உணரலாம்; அல்லது அவர்களைப்பற்றி எதிர் மறையாகக்கூடப் பேசலாம். ஆனாலும், வழிதவறிப்போன அந்தப் பிள்ளை யைத் தாம் ஒருபோதும் மறக்கவில்லை என்பதை தேவன் நமக்கு நினைவூட்டு கிறார்; நிச்சயமாக அவர் மறக்கவில்லை! அப்படிப்பட்ட ஒரு நபரைப்பற்றி தேவன் விரக்தியுடன் எண்ணுவதில்லை; மாறாக இதயப்பூர்வமாக, உண்மையாக எண்ணுகிறார். உண்மையில், அப்படிப்பட்ட நபர்களுக்காக அவரது இதயம் ஏங்குவதாக தேவன் கூறுகிறார். அவர்கள் தன்னிடம் திரும்பி வரவேண்டும் என்று அவர் ஆவலோடு காத்திருக்கிறார், அவருடைய இரக்கம் மிகப்பெரியது.

---

**எப்பிராயீமின் வழிதவறுதலால் ஏற்பட்ட ராகேலின் துயரத்திற்கு தேவன் அளித்த இந்தப் பதி லைத் தெரிந்துகொள்வது, கர்த்தருடனான உறவை விட்டு விலகிச்சென்ற உங்களைச் சார்ந்தவர் களைப்பற்றிய உங்கள் உணர்வுகளில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகிறது? இது உங்களுக்கு எவ்வாறு அறைகூவல் விடுக்கிறது அல்லது ஊக்கம் அளிக்கிறது?**

# அவர்களைத் திரும்பக் கொண்டுவாருங்கள்

தேவனோடுள்ள நமது பயணத்தில் நாம் அனைவரும் பலவீனமான அல்லது தடுமாற்றமான தருணங்களைச் சந்தித்திருப்போம்; அவை நம் இதயம் உண்மையற்றிருந்த அல்லது நீண்டகாலமாக நாம் வெதுவெதுப்பான நிலையில் இருந்த விசுவாசப் பள்ளத்தாக்குகளாக இருக்கலாம். மீண்டும் அவரோடு ஒரு நிலைத்திருக்கும் உறவுக்குள் உங்களைக் கொண்டுவந்தது எது?

**சகரியா 10இல் தேவன் தம்முடைய மக்களை மீண்டும் தம்மிடம் அழைத்து வருவதுபற்றிய சில அழகான செய்திகள் உள்ளன. இந்த அதிகாரத்தை இப்போது நிதானமாக வாசித்து, அதிலுள்ள முக்கியச் செய்திகளைக் குறித்துக்கொள்ளுங்கள்.**

---

கர்த்தருடனான உறவைவிட்டு விலகிச்சென்ற நமக்கு அன்பான ஒருவருடன் எப்படி உறவாடுவது, பழகுவது என்பது நம்ககு சவாலாக இருக்கலாம். என்ன நடந்திருந்தால் முடிவு வித்தியாசமாக இருந்திருக்கும் என்று நீங்கள் யோசிக்கலாம்; இப்போது அவர்கள் முற்றிலும் மாறுபட்ட உலகக்கண்ணோட்டத்துடன் இருப்பதால், அவர்களிடம் எப்படிப் பழகுவது என்று குழம்பலாம்; அவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளால் நீங்கள் ஏமாற்றமும், மனச்சோர்வும் அடையலாம்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் நீங்கள் அந்த நபரை நடத்தும் விதத்தில் எப்போதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, உங்கள் இரட்சகருடன் நீங்கள் செலவிடும் தனிப்பட்ட நேரத்திலிருந்து பொங்கி வழியும் அன்பின்மூலமாகவே நீங்கள் வாழ்வதும் பேசுவதும் மிகவும் அவசியமாகும்.

உங்கள் வாழ்க்கையின் சாட்சி, உங்கள் செயல்கள், உங்கள் வார்த்தைகள் மற்றும் தேவனை விட்டு விலகிச்சென்ற உங்கள் துணை அல்லது பிள்ளைக்காக நீங்கள் செய்கிற ஜெபங்கள், இவை அனைத்தும் அவர்களுடைய வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் முற்றிலுமாக மாற்றக்கூடும். பேதுருவுக்காக இயேசு செய்த ஜெபங்கள் எப்படி அவரது எதிர்காலத்தை மாற்றின என்பதை லூக் 22:31, 32 மற்றும் யோவான் 21:15-17 ஆகிய வசனங்களில் வாசியுங்கள். அவர்களுக்கு எதிராக உங்கள் மனதில் இருக்கும் எந்தவொரு துக்கத்தையும், விமர்சனத்தையும் அல்லது கண்டனத்தையும் தேவனிடம் ஒப்படைத்துவிடுங்கள்; அதற்குப் பதிலாக, அவர் மட்டுமே தரக்கூடிய அன்பினால் அந்த உணர்வுகளை நிரப்பும்படி அவரிடம் கேளுங்கள்.

மற்றவர்களுக்கு, கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிற நமது வாழ்க்கை உதாரணத்தின்மூலம், தேவனிடமிருந்து மட்டுமே வரக்கூடிய ஒன்றை கிறிஸ்துவை நிராகரித்தவர்கள் நம்மிடம் காண்பார்கள். அவர்கள் புத்திக்கு எட்டாத சமாதானத்தையும், ஒருபோதும் விட்டுவிலகாத அன்பையும், அனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும் விசுவாசிக்கிற நம்பிக்கையையும் நம்மிடம் காண்பார்கள். நம்மீதும் நம்முடைய அன்புக்குரியவர்கள்மீதும் தேவன் வைத்திருக்கும் அன்பு ஒருபோதும் அசைக்கப்படாது. நாம் ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்ளும் இந்த அன்பை, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் வழங்கமுடியும்.

---

**நாம் என்ன செய்யவேண்டும் என்று எபே 3:17-19 ஊக்குவிக்கிறது?**

# மேலும் படிக்க:

'எந்தத் தொழிலைச் செய்தாலும் சரி, ஒருவன் தன் சகோதரன்மீது சுயநலமற்ற அன்பைக் கொண்டிருக்கவில்லை என்றால், அவனிடம் தேவன்மீதான உண்மையான அன்பு இல்லை என்றுதான் அர்த்தம். ஆனால், மற்றவர்களிடம் அன்புகூர முயற்சிப்பதன் மூலம் இந்த உணர்வை நாம் ஒருபோதும் பெற்றுவிட முடியாது. இதற்குத் தேவையானது என்னவென்றால், இதயத்தில் கிறிஸ்துவின் அன்பு இருக்கவேண்டும். சுயம் கிறிஸ்துவோடு இணையும்போது, அன்பு தானாகவே பொங்கி வழியும்'. 'இயேசு கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிற பணியில் ஆர்வத்துடனும் உண்மையுடனும் தங்களை மிகவும் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்கிறவர்களே, ஆவிக்குரிய வாழ்விலும் பக்தியிலும் மிகச்சிறந்த வளர்ச்சியைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்'. 'தீவிரமாக ஊழியம் செய்வதால், தீமையை எதிர்ப்பதற்கான பெலனை அதிகம் பெறமுடியும்'.

'அவரது தியாகத்தால் ஆத்துமாக்கள் மீட்கப்படுகிற சந்தோஷ அனுபவமான அவரது மகிழ்ச்சியில் பங்கடைவதற்கு, அவர்களுடைய மீட்பிற்கு அவர் எடுக்கிற பிரயாசங்களில் நாம் பங்குபெறவேண்டும்'.

'கிறிஸ்துவுடன் சேர்ந்து ஊழியத்தைச் செய்கிற சிலாக்கியத்தைப் புறக்கணிக்கிறவர்கள், அவரது மகிமையில் பங்கெடுப்பதற்குத் தகுதிப்படுத்துகிற ஒரே பயிற்சியையும் புறக்கணிக்கிறார்கள்.'

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *பயனுள்ள சாட்சிபகருதல் எதுவானாலும், அன்பு ஏன் அடிப்படையாக, அவசியமாக இருக்கிறது?*

2 *தேவனுடன் தனிப்பட்ட, உயிருள்ள உறவு இருந்தால்தான் ஆத்தும ஆதாயம் வெற்றிபெறும் என்கிற உண்மையை எப்போது கண்டிருக்கிறீர்கள்?*

3 *தேவனைப்பற்றி மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஒரு அடிப்படைப் புரிதல் தேவையா? அப்படியென்றால், அது என்னவாக இருக்கும்?*

3 *ஓர் அவிசுவாசிக்கு வேதபாடம் எடுக்கும்போது, நீங்கள் எங்கிருந்து தொடங்குவீர்கள்? துவக்கத்தில் எதில் கவனம் செலுத்துவீர்கள்: சில உபதேசங்களை மெய்யென நிரூபிப்பதிலா அல்லது இயேசுவை அறியும்படி ஒருவரை அழைப்பதிலா?*

3 *மீட்புகுறித்த ஒரு பாடலைப் பாடுங்கள் அல்லது அதன் வார்த்தைகளைக் கவனியுங்கள். அதை எவ்வாறெல்லாம் அறிவிக்கிறீர்கள் என்று யோசியுங்கள்.*

**பாடச்சுருக்கம்:** நம் அனுதின வாழ்க்கையை தேவ அன்பும், அவரது ஜீவனுள்ள, வல்லமைநிறைந்த வார்த்தையும் நிரப்பும்போது, நம்மைச்சுற்றிலும் உள்ளவர்களை நேசிப்போம், அவரைப்பற்றிச் சொல்லுவோம். நாம் சாட்சிபகர்வதில் அதிக ஜெபத்தோடும், நிதானத்தோடும், நோக்கத்தோடும் செயல்படவேண்டும். தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் அவருடைய வார்த்தை அவரிடம் வெறுமையாகத் திரும்பாது; அது எதற்காக அனுப்பப்பட்டதோ அதை நிறைவேற்றி, அவர் விரும்புகிறதைச் செய்யும் என்பதை நாம் விசுவாசிக்கவேண்டும். ஏசாயா 55:11.

# வாகன நிறுத்தத்தில் ஒரு அந்நியன்

இந்தோனேசியாவில் முறையான சம்பளம் தரும் வேலை இல்லாமல் தனது மனைவியையும் மூன்று குழந்தைகளையும் செத் லூயிஸ் லெகாடொம்பெஸி எப்படி காப்பாற்றுகிறார் என்று மக்கள் அவரிடம் கேட்கிறார்கள். அதற்கு அவர், இது 'தேவனுடைய கிருபை' என்று கூறுகிறார். கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில், தேவனை அதிகம் நம்பவேண்டும் என்ற உறுதியான எண்ணம் செத்திற்கு ஏற்பட்டது. அதன்பிறகு அவர் ஒரு தன்னார்வ வேதாகம ஊழியராக பணியாற்ற முடிவெடுத்தார். ஆத்துமாக்கள்மீதான அக்கறையினால், தனது சகோதர சகோதரிகள் பலரை கிறிஸ்துவிடம் வழிநடத்த அவர் பயன்படுத்திய அதே திட்டத்தை இப்போதும் செயல்படுத்தத் தொடங்கினார்.

அவரும் அவர் மனைவியும் தாங்கள் வசிக்கும் அம்போன் தீவில் தங்களுக்குத் தெரிந்த ஒவ்வொரு நபரின் பெயரையும் ஒரு பட்டியலாகத் தயாரித்தனர். பிறகு அந்தப் பெயர்களுக்காக தினமும் ஜெபித்தார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் தங்களது இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு, அந்தப் பட்டியலில் உள்ளவர்களைச் சென்று சந்தித்தார்கள். இந்தச் சந்திப்புகள் வேதாகமப் படிப்புகளுக்கு வழிவகுத்தன; பலரை ஞானஸ்நானம் எடுக்கத் தூண்டின.

செத் மற்றும் அவரது மனைவி ஒரு நாளைக்கு சுமார் மூன்று குடும்பங்களைச் சந்தித்தனர். அவர்களது உரையாடல்கள் சில நேரங்களில் நள்ளிரவு வரை நீடித்தன. பலருக்கு அந்த குடும்பம் எப்படி பிழைப்பு நடத்துகிறது என்பது புரியவில்லை.

"பணத்தேவைகளுக்கு உதவும் வகையில் வேலையோ, சேமிப்போ அல்லது விற்கக் கூடிய சொத்தோ இல்லாமல் நீங்கள் எப்படி உயிர்வாழ்கிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார்.

"சம்பளம் இல்லாமல் வாழ்வது சாத்தியமே இல்லை, என்னால் இதை நம்ப முடியாது. தயவுசெய்து இதை நிரூபித்துக் காட்டுங்கள்" என்றார் மற்றொருவர்.

தங்கள் குடும்பம் சவால்களை எதிர்கொண்டதை செத் ஒப்புக்கொள்கிறார். ஒரு வெள்ளிக்கிழமை அன்று, கையில் இருந்த பணம் தீர்ந்து போனது. செத்தும் அவர் மனைவியும் தேவனுடைய தலையீட்டிற்காக வேண்டினார்கள். அவர்களின் ஜெபம் ஓய்வுநாள் வரை நீடித்தது. அந்த ஓய்வுநாளில், ஆலயத்தின் வாகன நிறுத்தத்தில் ஒரு அந்நியன் செத்திடம் வந்து ஒரு உறையைக் கொடுத்தார். "நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் ஊழியத்தைத் தொடர இது உங்களுக்கு உதவியாக இருக்கும்" என்று அவர் கூறினார். வீட்டிற்குச் சென்றதும், செத்தும் அவர் மனைவியும் தேவனுக்கு நன்றி கூறிவிட்டு அந்த உறையைத் திறந்தனர். அதற்குள் பல மாதங்களுக்குத் தேவையான செலவுகளைச் சமாளிக்கக் கூடிய அளவிலான பணம் இருந்தது. ஆதாரத்தைத் தேடுபவர்களிடம் செத் இந்த அனுபவத்தைக் கூறி, "தேவனுடைய கிருபையால் எங்களுக்குக் கிடைத்த நூற்றுக்கணக்கான அனுபவங்களில் இது ஒன்று மட்டுமே" என்கிறார்.



இன்று, செத் கிளாபட் பல்கலைக்கழகத்தில் இறையியல் பயின்று வருகிறார். வேதாகமப் படிப்புகளை இன்னும் சிறப்பாகக் கற்றுக்கொடுப்பது எப்படி என்பதை அறிந்துகொள்வதே அவரது நோக்கம். இப்போதும் தேவன் தனது குடும்பத்தின் செலவுகளைப் பொறுப்பேற்று நடத்தி வருவதாக அவர் கூறுகிறார். தனது படிப்பு முடிந்ததும் போதகராகவோ, வேதாகம ஊழியராகவோ அல்லது கடவுள் காட்டும் வேறு எந்தப் பணியைச் செய்யவும் அவர் தயாராக இருக்கிறார்.